தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

இ. பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவை'ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஈ. புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப்பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1981-ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.